# தமிழ் அகராதிகளின் உருவாக்கத்தில் பேச்சுவழக்குச் சொற்களின் முக்கியத்துவம்

**பேராசிரியர் சுபதினி ரமேஸ்**

மொழியியல் ஆங்கிலத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
subathini128@gmail.com

## அறிமுகம்

தமிழ்மொழியின் தொன்மையையும், அதன் தனித்துவத்தையும் வரலாற்றில் நிலைநிறுத்துவதற்கு அம்மொழி பற்றிய சொற்கள், பண்பாடுகள், வரலாறுகள், கலை கலாச்சாரங்கள், சமயங்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கிய முழுமையான ஆய்வு காலத்திற்குக் காலம் செய்யப்படல் வேண்டும் என்பதை மறுக்க முடியாது. அவ்வகையில் இலங்கைத்தமிழ் ஆய்வுகள் பற்றி தொடர்ச்சியாக அறிஞர்களால் பேசப்பட்டு வந்தாலும், அதற்குரிய ஒரு அங்கீகாரம் இதுவரை முழுமையாக முன்வைக்கப்படவில்லை. அதுவும் குறிப்பாக இலங்கைத் தமிழ்ச் சொற்கள் பற்றிய ஆய்வுகள் இன்றும் பூரணமடையவில்லை எனலாம்.

தமிழ்மொழியிலுள்ள அகராதிகள் பெரிய, நீண்ட பாரம்பரியத்தையும், வரலாற்றையும் கொண்டமைந்தவையாகும். 1842இல் இருந்து தோன்றிய அகராதிகள் இன்று வரை பலவகையான மாற்றங்களுக்கூடாக வெவ்வேறு அகராதிகளாக பரிணமித்துள்ளன. குறிப்பாக இலங்கையில் உருவாக்கப்பட்ட பல அகராதிகள் தமிழின் செழுமையையும், சொற்களின் பொருளையும் புலப்படுத்தி வருகின்றன. அவ்வகையில் தமிழ்மொழியின் அகராதிகளில் சிறப்பாக க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி அனைவராலும் பாராட்டப்படும் ஒன்றாகும். அதே நேரம் யாழ்ப்பாண அகராதி, தமிழ் லெக்ஸிக்கன் போன்றவையும் இலங்கைத் தமிழிலுள்ள சொற்களை ஒன்றாக்கி பொருள் புலப்பட உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இச்சொற்கள் அனைத்தும் இவ்வகராதி உருவாக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பதில் இன்றும் தெளிவற்ற ஒரு பார்வை காணப்படுகிறது. இதனாலேயே இந்த ஆய்வை வேறொரு கோணத்திலிருந்து பார்க்க வேண்டிய தேவை தற்காலங்களில் ஏற்பட்டு வருகிறது.

தமிழ் அகராதி ஆய்வுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட பேராசிரியர் சுசீந்தரராஜா அவர்கள் தமிழ் லெக்ஸிக்கன், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதிகளில் பயன்படுத்தப்பட்ட பேச்சுத் தமிழ்,

எழுத்துத் தமிழ்சொற்கள் பற்றிய பலவிதமான கருத்துக்களை எடுத்துக்கூறி அதற்கான விளக்கங்களையும் தமது நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளார். (தமிழியல்சார் சிந்தனைத் துளிகள் - 2,2011). இங்கு காணப்பட்ட சந்தேகங்களை அவ்வப்போது அவர் வெளியிட்டதுடன் அதற்கான பதிலையும் சில இடங்களில் தானே கூறிச்சென்றுள்ளமையை நாம் அவதானிக்கலாம். அவருடைய சொல்லாராய்ச்சிகளில் மிகவும் முன்னிலையில் நிற்பது பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் பற்றிய விடயங்களே. அகராதிகளில் பேச்சுத்தமிழ் சொற்களையா, எழுத்துத்தமிழ் சொற்களையா அகராதி தொகுப்பாளர்கள் கையாண்டிருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதே. மேலும் சொற்களை எவ்வாறு பாகுபடுத்தியிருக்கிறார்கள்? அதற்கான அடிப்படையாது? என்பதெல்லாம் பேராசிரியரிடமிருந்து வெளிப்பட்ட பல கேள்விகளாகும். இத்தகைய பலவாதப் பிரதிவாதங்களை அவர் முன்வைக்கக் காரணம், அடிப்படையில் அவர் ஒரு மொழியியல் அறிஞர். அவருடைய கருத்துக்கள் தமிழ் மொழியியல் என்ற பாதைகளினூடாக வெளிப்பட்டபோது, மொழியியலின் அடிப்படை இலக்கணம் பற்றி இப்பரந்த உலகில் எல்லோராலும் பேசப்பட்டது. அவ்வகையில் எம்போன்ற பல ஆராய்ச்சியாளர்கள் இலங்கைத் தமிழ்ச் சொற்களின் ஆய்வுகளுக்குள் உட்புகவேண்டிய தேவையேற்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேரகராதி (*Tamil Lexicon, 1930*) க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (2008) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழுக்கும், இந்தியத் தமிழுக்கும் இடையே காணப்பட்ட சொல் வழக்கு வேறுபாடுகள் மிகநுட்பமாக ஆராயப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக பேச்சுத் தமிழ்ச் சொற்கள் பற்றிய ஆய்வுகள் மொழியியலாளரிடம் ஒருபடி மேலாகவே பேசுபொருளாயிற்று. இதுவரை காலமும் இலங்கை மொழியியலாளர்களால் தமிழ் லெக்ஸிக்னின் ஏழு தொகுதிகளிலும் (முதன்மைத் தொகுதி 6, துணைத் தொகுதி 1) க்ரியா அகராதிகளின் இரு பதிப்புக்களிலும் காணப்பட்ட இலங்கைச் சொற்கள் பற்றிய ஆய்வுகள் ஆய்வாளர்களிடையேயும், அறிஞர்களிடையேயும் பல்வேறுவகையான எண்ணங்களைத் தோற்றுவித்தன.

தமிழ் அகராதி உருவாக்க வளர்ச்சியில் பலர் குறிப்பாக பேராசிரியர்கள், தனிப்பட்ட ஆய்வாளர்கள், அறிஞர்கள், மாணவர்கள் எனப் பலர் காலங்காலமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் பேராசிரியர்களான வேலுப்பிள்ளை, சுசீந்திரராஜா அவர்களின் வழிகாட்டலில் மொழியியல் ஆய்வாளர்கள் தற்கால மொழியியல் அடிப்படையில் சொல் ஆராய்ச்சிகளில் ஈடுப்பட்டதோடு மட்டுமல்லாமல், முடிந்தவரை சொற்களைச் சேகரித்து அவற்றை பேரகராதி உருவாக்கத்தில் (1986) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். அவ்வகையில் இலங்கைப் பேச்சுவழக்குச் சொற்கள் எவ்வகையில் அகராதி உருவாக்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன எனத் தொடர்ந்து நோக்கலாம்.

பேச்சுமொழியாகிய பிரதேசவழக்கு என்பது வெறும் கொச்சைவழக்கு என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாத அளவுக்கு இன்று மொழியாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எமது மொழியில் காணப்படுகின்ற சொற்கள் ஆரம்பத்தில் வழங்கிய பொருளினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இந்நிலையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் காணப்படுகின்ற யாழ்ப்பாண வழக்குச்சொற்களின் பொருள் இன்று அவ்வழக்கில் வழங்கும் சொற்களின் பொருளிலிருந்து மாறுபட்டு வழங்குவதை எம்மால் உணரமுடிகிறது. அவ்வகையில் இவ்வகராதியை மையமாகக்கொண்டு சொற்பொருள் மாற்றம் பற்றிய ஆய்வினை இதுவரை எவரும் மேற்கொள்ள முன்வரவில்லை.

பேரகராதியில் 1772 சொற்களும், 1209 சொற்பொருள்களும் யாழ்ப்பாண வழக்கு எனத் தரப்பட்டுள்ளன. இவற்றின் இன்றைய நிலையாது என நோக்குமிடத்துப் பலசொற்கள் தமது பழைய நிலையிலிருந்து மாறுபட்டும், திரிந்தும், சொற்பொருள்கள் மாற்றமடைந்தும், புதியபொருள் உருவாகியும், வழக்கொழிந்தும் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. மேற்பட்ட சொற்களை இலங்கை வழக்கு யாழ்ப்பாண வழக்கு என அடையாளம் காட்டுகின்றன. இதில் பொதுச் சொற்களும், பேச்சுத் தமிழ்ச் சொற்களும் கலந்து இருப்பதைக் கண்ட சுசீந்திரராஜா அவர்கள் தனது நூலில் அச்சொற்களின் தோற்றம், பயன்பாடு, மாற்றங்கள் பற்றி பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரின் ஆய்வின்படி க்ரியாவின் அகராதிகளில் 436 ஆக இருந்த சொற்கள் 1700 ஆக அதிகரித்தமைக்கான காரணங்களைத் தனது நுணுக்கமான சொல்லாராய்ச்சிகளின் மூலம் எடுத்துக்காட்டி அவ்விரிவாக்கம் மேலும் விரிவாக்கப்படவேண்டும் என எடுத்துக்காட்டியுள்ளதன் மூலம் அவரின் ஆதங்கம் வெளிப்படுகிறது. சொற்கள் மட்டுமல்ல, சொற்பொருள்களில் கூட ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டும் இவ்விரிவாக்கம் அவசியம் என குறிப்பிடுகின்றார்.

இலங்கைத் தமிழ்மொழி குறிப்பாகச் சொல் நிலையில் விரிவடைந்து போவதற்கு பேச்சுவழக்குச் சொற்களின் சேர்க்கையும் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அவ்வகையில் இலங்கைத் தமிழிலுள்ள பேச்சுவழக்குச் சொற்கள் சிலவற்றை எடுத்து ஆராய்ந்து, அவை அகராதிகளில் இடம்பிடித்துக் கொண்டமைக்கான காரணத்தை இங்கு நோக்கலாம். சென்னைப் பல்கலைக்கழக பேரகராதிகளில் காணப்பட்ட 1496 சொற்களில் சில க்ரியாவின் அகராதியில் காணப்படவில்லை எனில், அவை எவ்வாறு முன்னைய அகராதிகளில் (வின்சிலோ 1862; யாழ்ப்பாண அகராதி 1843) காணப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட வேண்டியுள்ளது. இச்சொற்கள் இலங்கைப் பொதுவழக்குச் சொற்களாகக் கருதப்படக் காரணம், அன்று தோன்றிய சொற்கள் காலப்போக்கில் பெருவழக்குச் சொற்களாக மாறியிருக்கவும் கூடும். அது மக்களின் பயன்பாட்டைப் பொறுத்தது. எனவே பேச்சுவழக்குச் சொற்கள் மக்களின் அன்றாடவாழ்க்கையில் பயன்படுத்தப்பட்டாலும், அதனை அங்கீகரிப்பது அகராதிகளே. அவை பேச்சுவழக்கிலிருந்து எழுத்து வழக்காக அதாவது பொதுவழக்காக மாறுந்தன்மையை அடைகின்றமையேயாகும். உதாரணமாக பின்வரும் சொற்களை நோக்குவோமானால் அடாத்து, அமசடக்கி, அறுக்கை, ஈர்க்குமாறு, ஊத்தைவாளி, எடுபிடி, எழுப்பம், கூப்பன்கடை, பக்கீஸ்பெட்டி என்பன பேச்சுவழக்குச் சொற்களாகும். மேற்குறிப்பிட்ட சொற்கள் போன்று ஆயிரக்கணக்கான சொற்களை எம்நாட்டில் காணக்கூடியதாக இருக்கிறது. இவை போன்று இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படும் இச்சொற்கள் தற்போதைய அகராதிகளிலும், இருப்பதை ஆய்வு மூலம் கண்டுள்ளோம். ஆனால் இவ்வாய்வுகள் முழுமையான களஆய்வுகளாக செய்யப்படவில்லை என்பதை திட்டவட்டமாகக் குறிப்பிடலாம். இரண்டாந்தரத் தரவுகளாகவும், அக்கால அகராதிகளினூடாகவும், நூல்கள், பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகவும் இருந்திருக்கலாம். வின்சிலோ அகராதியை ஆதாரமாகக் கொண்ட சொற்கள் சொற்பொருள்கள் பல ஆயிரம் உண்டு. அவை லெக்சிக்கனிலோ, க்ரியாவின் அகராதிகளிலோ காணப்பட்டாலும், அவற்றின் மூலம் எது என்பதற்கான ஆய்வுகள் மீண்டும் மீண்டும் செய்யப்படல் வேண்டும். அதுமட்டுமல்லாமல் இலங்கைப் பொதுவழக்குச் சொற்கள், இந்திய பொதுவழக்குச் சொற்கள் எனக் குறிப்பிடப்படுபவை அவ்விரு இடங்களிலும் உண்மையில் பொதுவழக்குச் சொற்கள்தானா என்ற ஒரு கேள்வியும் மனதில் எழுகிறது.

இவை போன்று ஏனைய சொற்களும் தமிழர் வாழும் மற்றப் பகுதிகளில் காணப்படுவதைக் காணலாம். குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கும் சொற்களும் யாழ்ப்பாண வழக்குச் சொற்கள் எனப் பேரகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழர்களும் தமிழ்பேசும் இஸ்லாமியர்களும்கூட மேற்குறிப்பிடப்படும் சொற்களைத் தமது வழக்கில் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும் பேரகராதியின் பதிப்பாசிரியர்கள் ஏதோ காரணத்திற்காக யாழ்ப்பாணத் தமிழ் வழக்கில் காணப்பட்ட சிறப்புச் சொற்களை மட்டும் அன்று அகராதியில் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் இலங்கையின் ஏனைய பகுதித் தமிழ் வழக்கைக் கருத்தில் கொள்ளவில்லை.

இலங்கைப் பேச்சுவழக்குச் சொற்கள் என அறிஞர்கள் அதிகமாகக் குறிப்பிடுவது யாழ்ப்பாண வழக்குச் சொற்களையே. இந்தவகையில் இலங்கையில் முதன்முதலாக இலக்கிய அந்தஸ்து பெற்ற ஒரு பேச்சுவழக்காக, அதிலும் சிறப்பாக வடமராட்சி பிரதேச பேச்சுமொழியே கையாளப்படுகிறது. வடமராட்சியின் பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வினூடாகவும், இப்பிரதேசங்களில் படைக்கப்பட்ட படைப்புக்கள் மூலமும் அதன் பேச்சு வழக்காறுகளை, அதன் தனித்துவங்கள், வேறுபாடுகளுடன் பல்வேறுபட்ட தொழிற்சமூகத்தினர் கையாண்ட மொழிக்கூடாகவும் பேச்சுவழக்குச் சொற்கள் பல மேலெழுந்துள்ளன. இச்சொற்களுக்குள் காணப்பட்ட நுண்ணிய வேறுபாடுகளையும் அக்காலத்தில் வாழ்ந்த சிறுகதை, நாவல் எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கூடாகவும் அறிந்துகொள்ள க்ரியாவின் தமிழ் அகராதி மிகவும் துணைநிற்கின்றது. ஆனால் இவற்றைப் பிரதேசம் சார்ந்து பேச்சுத் தமிழ் எனப் புறந்தள்ள முடியாது. ஏனெனில் இச்சொற்கள் யாழ்ப்பாணத்து மானிப்பாய் அகராதி *(1843)*, சதுரகராதி *(1860)*,வின்சுலோ அகராதி *(1862)*, சங்கத்து அகராதி *(1910,1923)* முதலிய அகராதிகளில் இடம் பெற்றுள்ளமைக்கான ஆதாரங்கள் நிறையவே கிடைத்துள்ளன.

இன்று வழக்கில் காணப்படும் சொற்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் இலங்கைக் கிளைமொழிகளில் எல்லாம் காணப்படுவதால் நாம் வேறுசில காரணங்களையும் சிந்திக்கலாம். இச்சொற்களைத் தமிழ் அகராதிக்குக் கொடுத்தோர் சொற்களை எவ்வாறு திரட்டிக் கொடுத்தார்கள் என நாம் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இச்சொற்களைத் தமிழ் அகராதிக்குக் கொடுத்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்களாகையால் பொதுவாக இலங்கைச் சொற்களையும் யாழ்ப்பாணத்தில் அதிக தமிழர்கள் வாழ்ந்து வந்தமை கருதி யாழ்ப்பாண வழக்கு என்றே கொடுத்திருக்கலாம். அல்லது இச்சொற்கள் அகராதிக்குக் கொடுக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்திற்கு உரிய சொற்களாக மட்டும் இருந்தாலும் இச்சொற்கள் கொடுக்கப்பட்டுச் சிறிது காலத்தின் பின்னர் ஏனைய கிளைமொழிகளுக்கும் பரவி இருக்கலாம் என எண்ண இடமுண்டு.

தமிழ் அகராதியில் உள்ள யாழ்ப்பாணத்துச் சொற்கள் இலங்கை முழுவதும் ஏற்படுத்தியுள்ள பாதிப்பைப் பொதுவாக நோக்கினால் இன்று இலங்கை முழுவதிலும் 59.9 சதவீதம் சொற்கள் வழக்கிழந்து காணப்படுகின்றன. இன்று வழங்கப்பட்டுவரும் சொற்களில் அதிகமானவை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது இலங்கையின் ஏனைய தமிழ்க் கிளைமொழிகளிலும் பரந்துகாணப்படுகின்றன. பொருள் மாற்றம் ஒலி மாற்றத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரேவிதமான சொற்கள் ஒரேவிதமான மாற்றத்தைப் பெற்றுக் காணப்படுகின்றன.

சமூக மொழியியலாளர்களாலும், மானிடவியல் அறிஞர்களாலும் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுகள் மொழிச் சமுதாயத்தையும், பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பையும் பிரிக்க முடியாதென பல ஆய்வுகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளனர். சமூகத்தின்

புறச்சூழலும் கூட மொழியை, அதன் சொற்களை உருவாக்க, நிலைபேறு கொள்ள காரணமாகின்றன. தமிழ்மொழியின் பேச்சுவழக்கினூடாக நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டார் இலக்கியங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள் போன்றன பண்பாட்டுடன் தொடர்பு படுத்தப்படுகின்றன. இவற்றுக்கு அப்பால் இப்பிரதேசத்தின் வாய்மொழி இலக்கியங்கள், உறவுமுறைச் சொற்கள் வேறுபட்ட தொழிற்சொற்கள், நாட்டார் பாடல்கள், கடலோரப் பாடல்கள் போன்றவற்றினூடாகவும் பேச்சுவழக்குச் சொற்கள் அகராதிகளில் இடம் பெற்றுள்ளன. இவை காலப்போக்கில் பொதுத் தமிழ்ச் சொற்களாகவும், இடையில் வழக்கிழந்து போனவையாகவும் ஆய்விலிருந்து கண்டு கொள்ள முடிந்தது. அதுமட்டுமல்லாமல் இப்பேச்சுவழக்குச் சொற்களை பிரதேச ரீதியான, வட்டார ரீதியான சொற்களாக ஆய்வாளர்கள், அறிஞர்கள் தரம் பிரித்தாலும் அவை தமிழ் லெக்ஸிக்கனிலும், க்ரியாவின் அகராதிகளிலும் பொதுத் தமிழ்ச் சொற்களாக சேர்க்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே போன்றே பேச்சுவழக்கில் காணப்பட்ட பல உறவுமுறைச் சொற்கள் இன்று பொதுவழக்குச் சொற்களாக இணைக்கப்பட்டுள்ளமை, அச்சொற்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக பெத்தாச்சி, அக்காச்சி, அக்காத்தை, பெத்தாத்தை, வளத்தம்மா என சிலவற்றைக் குறிப்பிடலாம். இந்தியத் தமிழர் குறிப்பாக தமிழ்நாட்டை பொறுத்தவரை பல சுதேசவழக்கு அகராதிகள், சிறப்பாக ராஜநாராயணனின் வட்டார வழக்கு அகராதி (1982) போன்று பல அறிஞர்கள் பல வட்டாரவழக்கு அகராதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய பிரதேசவழக்கு அகராதிகள் பெருமளவாக உருவாக்கப்படவில்லை. பெரும்பான்மையான பிரதேச வழக்குச் சொற்கள், பொதுவான அகராதிகளில் காணபட்டாலும், அவை இடரீதியாக ஆய்வு செய்யப்படவில்லை என்றே குறிப்பிடலாம். ஆனால் இப்பிரதேசங்களைப் பிரதிபலிக்கும் பல பேச்சுவழக்குச் சொற்கள் தற்கால அகராதிகளில் காணப்படுவதை ஒருவரும் மறுக்க முடியாது. எனினும் இப்பேச்சுச் சொற்களின் சொற்பொருளானது காலத்துக்குக் காலம் மாற்றமடைவதைத் தவிர்க்க முடியாது. இத்தகைய மாற்றங்களால் அச்சொற்களின் பொருள் வேறுபட்டும், சிதைந்தும், சிலவேளைகளில் திரிந்தும், சிலவற்றில் அதன் பொருளை மேலதிகமாக விளக்குவதாகவும் கூட அமையலாம். சில சொற்கள் அருகி வழக்கொழிந்த சொற்களாகவும் காணப்படலாம். இத்தகைய வாதங்களை வலுப்படுத்த சுசீந்திரராஜா அவர்கள் தமிழ் லெக்ஸிக்கனையும், க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியையும் அடிப்படையாகக் கொண்டு எம்மத்தியில் பல சான்றுகளை முன்வைத்துள்ளார். இத்தகைய ஆதாரங்களை நாம் "தற்காலத் தமிழகராதியில் வேண்டாதசொற்களா" என்ற கட்டுரைத் தலைப்பில் தமிழியல்சார சிந்தனைத் துளிகள் - 2 (2011) என்ற நூலிலும், இலங்கை-இந்திய தமிழ் வழக்குகளில் சொற்களின் பயன்பாடு (2015) என்ற நூலிலும் காணலாம்.

**முடிவுரை**

தமிழ் அகராதியில் காணப்பட்ட யாழ்ப்பாணத்து வழக்குச் சொற்கள் 2971 ஆகையால் இச்சொற்களின் ஆக்கம் பற்றியும் பொருள் அமைப்பு பற்றியும் தனியே ஒரு ஆராய்ச்சியை விரிவாகச் செய்ய முடியும். அச்சொற்களை ஏனைய திராவிட மொழிச் சொற்களோடு ஒப்புநோக்கி ஆராய்வதும் பயனுடைத்து. இன்று வழக்கற்றுக் காணப்படும் சொற்களை அகராதியில் இருந்து நீக்குவதா? இல்லையா? என்பது பிரச்சினைக்கு உரிய விடயமாகும். ஏனெனில் வழக்கிழந்த சொற்களை அகராதியிலிருந்து நீக்கினால் ஒருகாலத்தில் யாழ்ப்பாண வழக்கென்று இருந்த சொற்கள் காலகதியில் மறைந்து போய்விடும். ஆதலால் அகராதி திருத்தி அமைக்கப்படும் காலத்தில் வழக்கு இழந்த சொற்களை நீக்கிவிடாமல் இன்று இச்சொற்கள் வழக்கில் இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஒரு குறியீட்டைக் காட்டி

இச்சொற்களைத் திரும்பவும் அகராதியில் குறிப்பது பயனுடைத்து. இன்று வழக்கில் உள்ள சொற்களை யாழ்ப்பாண வழக்கென்று கொடுக்காமல் பொதுவான இலங்கை வழக்கு என்று கொடுப்பது நன்று.

இறுதியாக, அகராதிகளில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்கள், நாளடைவில் பொதுவழக்குச் சொற்களாக மாறுவதற்குரிய காரணங்களை மேலே பார்க்க முடிந்தது. அவ்வகையில் சென்னைத் தமிழ் பேரகராதியும், க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியும் இலங்கைப் பேச்சுவழக்குச் சொற்களையும், பொதுத் தமிழ்ச்சொற்களையும் தன்னகத்தே உள்வாங்கியிருந்தாலும் காலமாற்றங்களுக்கேற்ப அவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மேலும் மேலும் புதிய வடிவங்களை எடுத்துக்கொள்கின்றன. சமூகத்தின் நாகரிக வளர்ச்சி மட்டுமல்லாமல் தொழிநுட்ப வளர்ச்சியும் வளர்ந்து கொண்டு செல்லும்போது, பேச்சுமொழிகளிலும் மாற்றங்கள் ஏற்படத்தானே செய்கின்றது. குறிப்பாக சொல்நிலை மாற்றங்கள் தவிர்க்க முடியாததாகும்போது, பல சொற்கள் வழக்கொழிந்து போகும். பல சொற்பொருள்களில் மாற்றங்கள் ஏற்படும். அதனால் காலத்திற்கேற்ப புதிய சொற்கள் உருவாகும். இத்தகைய மாற்றங்களுக்கு மொழியியல் காரணிகள், அந்நிய மொழிச் செல்வாக்கு, வரலாற்றுக் காரணிகள், பண்பாட்டுக் காரணிகள் யாவுமே காரணமகின்றன. இவற்றையே க்ரியாவின் அகராதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் பேச்சுவழக்குச் சொற்களின் முக்கியத்துவம், காலவளர்ச்சியில் ஒரு முக்கிய மாற்றத்தை உருவாக்கி, அகராதிகளில் இடம்பிடித்துக் கொள்கின்றன. அகராதிகள் படிப்பதற்கான நூல்களல்ல. அவை தேவையான நேரத்தில், தேவைக்காகப் பயன்படுத்தப்படுபவை.

**உசாத்துணை நூல்கள்**

1. மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு
அண்ணாமலை, இ.,
தொடர் பாடல் மொழி நவீனத்துவம் (பதிப்பு)
எம்.ஏ.நுகுமான், இந்துசமய கலாசாரத் திணைக்களம், கொழும்பு, 1993.

2. தமிழில் கலைச் சொல்லாக்கம் (பதிப்பு)
இராமசுந்தரம், கி. இந்துசமய கலாசாரத் திணைக்களம், கொழும்பு, 1993.

3. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, (இரண்டாம் பதிப்பு), 2008.

4. கையகராதிப் பதிப்பு வேறுபாடுகள்,
குமரேசன், விருபா, நெய்தல் ஆய்வு (காலாண்டு ஆய்விதழ்),
மலர் - 2, இதழ்-1, 2017, பக் : 64-71

5. இலங்கை இந்திய தமிழ் வழக்குகளில் சொற்களின் பயன்பாடு,
சுசீந்திரராஜா, சு. இந்துசமய கலாசாரத் திணைக்களம், கொழும்பு, 2015.

6. .........மொழியியல்சார் சிந்தனைத் துளிகள்-2,
சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2011.

7. பேரகராதியும் இலங்கைத் தமிழ்ச் சொற்களும், *Indian Scientific Tamil Society (Seventh Seminar) Tamil University, Thanjavur, India,*
சுபதினி.ர, பக்:448-456 1998

8. ..........இலங்கைத் தமிழ் சிறப்புச் சொற்கள்
*Paranan Association & Printers, Colombo, 2005.*

9. ..........“வரலாற்று நோக்கில் இலங்கை இந்திய தமிழ் அகராதிகள்”, மொழித் தன்னாட்சியும் அகராதி ஆளுமையும் (ஆராய்ச்சித் தொகுதி), தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்தியா, 2017

10. சென்னைத் தமிழ்ப் பேரகராதி, (தொகுதிகள் 6, துணைத்தொகுதி 1), சென்னைப் பல்கலைக்கழகம், 1930.

11. “வடமராட்சிப் பிரதேசத்தின் பேச்சுத் தமிழ் வழக்காறுகளும் தொழில்சார் சொற்கோலங்களும் - ஒரு சமூக மொழியியற் பார்வை”, நந்தகுமார், வேல், பிரதேசசெயலகம், கரவெட்டி, 2013.

12. *Winslow,M, A Comprehensive Tamil and English Dictionary*, 1862.